# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2394/55 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/55 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சனாதிபதித் தேர்தல் - 2024**

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 119 ஆ ஆம் பிரிவு*

**தனக்குரிய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ளபோது வாக்களிப்பதற்கான நடைமுறை**

பிரதேசத்தில் நிலவும் நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு, பிறிதொரு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோருவதற்கு முடியும். 1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 119ஆ ஆம் பிரிவின் கீழ் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

02. இதற்குத் தேவையான விண்ணப்பப்பத்திரங்களை அனைத்து மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்/மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். சட்டத்திற்கிணங்க பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் அதாவது, 2024, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த விண்ணப்பங்களை தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு அலுவலகம், சரண மாவத்தை, இராஜகிரிய என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. விண்ணப்பதாரி வதிகின்ற பிரதேசத்தின் கிராம அலுவலர் மூலம் விண்ணப்பப்பத்திரத்தை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதோடு, தனது தேசிய ஆளடையாள அட்டையை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடுதல் அவசியமாகும். கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.


1A - G 42321 — 54 (2024/07)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

04. விண்ணப்பதாரிகள் 2024 ஆம் ஆண்டின் தேர்தலுக்காக செல்லுபடியாகும் ஒன்றிணைந்த தேருநர் இடாப்பின் அடிப்படையில் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டுமென்பதோடு அந்த இடாப்பு பற்றிய தகவல்கள் அனைத்து மாவட்டச் செயலகங்களில்/கச்சேரிகளில் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.lk இணையத்தளத்தில் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, யூலை 26.

EOG 07-0254